## சமூக வலைதளங்களின் பதிவுகளே, எளிதாக மக்களைச் சென்றடையும் தேர்தல் வியூகங்கள்!

# 25 சார்பு அணிகளும் 'வாட்ஸ்அப்' குழுக்களை உருவாக்கி, கழக அரசின் திட்டங்கள் - சாதனைகளைப் பதிவு செய்யுங்கள்!

## பெரம்பலூரில் நடைபெற்ற சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பில் — துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!





பெரம்பலூர், மார்ச் 14-

**பெரம்பலூரில், அரியலூர்- பெரம்பலூர் மாவட்டக் கழகங்களின் சார்பு அணிகள் நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. இதில் கழகத்தின் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.**

**நிகழ்ச்சியில் பேசிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ``25 சார்பு அணிகளும் உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய நண்பர்கள், மருத்துவர்கள், பொறியாளர்களுடன் வாட்ஸ்அப் குழுக்களை உருவாக்கி, உங்கள் கருத்துகளை அதில் பதிவு செய்யுங்கள். யூடியூப், வாட்ஸ்-அப், ஃபேஸ் புக் ஆகிய சமூக வலைதளங்களில், கழகத்தின் வரலாறு மற்றும் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் சாதனைகளைத் தவறாமல் பதிவு செய்யுங்கள். இவைதான் மக்களை எளிதாகச் சென்றடையும் தேர்தல் வியூகங்கள். வருகின்ற 40 நாட்களும் நாம் அயராது உழைத்தால், நம்மை எவராலும் வெல்ல முடியாது" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

சார்பு அணிகள் நிர்வாகிகள் சந்திப்பில் உங்களையெல்லாம் சந்திப்பதில் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களையெல்லாம் சந்திப்பதற்கும் பேசுவதற்கும் வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் சிவசங்கர் அவர்களுக்கும், அண்ணன் ஜெகதீசன் அவர்களுக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, நம் கழகத்தின் மாநாடு திருச்சியில் மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது. அங்கே உங்களில் பல பேரை நான் நேரடியாகச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். மீண்டும் இரண்டே நாட்களில் மீண்டும் இந்த வாய்ப்பைப் பெற்றதற்கு உண்மையாகவே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மூன்று நாட்களுக்கு முன்புதான், இந்த மாவட்டத்தில் சுற்றுப்பயணம் என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த மூன்றே நாட்களில் இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்ததற்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நின்றதில் வென்ற ஒரே தலைவர்

நம் தலைவர், கலைஞரின் பெருமையைப் பேசும் போது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலே எந்தத் தலைவருக்கும் அந்தப் பெருமை கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம்கூட சில நேரங்களில் வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டிருக்கலாம். ஆனால், தான் நின்ற தேர்தல் அனைத்திலும் வென்ற ஒரே தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஒருவரே என்ற பெருமை நம் கலைஞருக்கு உண்டு.

நம் தலைவருக்கு ஒரு பெருமை உண்டு. தான் தலைவராகப் பொறுப்பேற்ற பின்பு, நம் இயக்கம் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றிபெற்ற ஒரே தலைவர் நம் தலைவர்தான். அந்தப் பெருமைக்கெல்லாம் காரணம் இங்கிருக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்புதான்.

இன்று தி.மு.க-வுக்கு வயது 76. பவள விழாவை முடித்துவிட்டு, இன்று 76-வது வயதில் அடியெடுத்து வைத்து நாம் சென்றுகொண்டு இருக்கிறோம். 76 வயதைக் கடந்தும், இன்றும் அதே இளமையோடும் துடிப்போடும் நம் தி.மு.க செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்றால், கழகத்தின் உடன்பிறப்புகள் நீங்கள்தான் அதற்கு முழு காரணம்.

### சார்பு அணிகள் — பயிற்சிக்களம்

கழகத்தில் சார்பு அணிகளின் சந்திப்பு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. யூத் விங், ஸ்டூடண்ட்ஸ் விங், ஐ.டி விங் என்று ஆங்கிலத்தில் சொல்வோம். 'விங்க்ஸ்' என்றால், தமிழில் 'சிறகுகள்' என்று அர்த்தம். ஏன் `விங்க்ஸ்' என்று சொல்கிறோம், ஏன் சிறகுகள் என்று சொல்கிறோம் என்றால், அந்த சிறகுகள் வேலை செய்தால்தான், அது உழைத்தால்தான் அது உயர உயரப் பறந்துகொண்டே இருக்கும். அது மாதிரி விங்க்ஸ் நீங்கள்தான், உங்களின் உழைப்பால்தான், உங்களின் வெற்றியின் மூலமாகத்தான் நம் இயக்கம் இன்றைக்கு மேன்மேலும் பறந்துகொண்டிருக்கிறது, வளர்ந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தாய்க் கழகத்துக்கு செல்வதற்கு முன்பு, ஒரு பயிற்சிக்களம்தான் சார்பு அணிகள் என்பதை நாம் மனதில் வைத்து பணியாற்ற வேண்டும்.

ஒரு வாக்குறுதியை நிச்சயமாகத் தருகிறேன், சார்பு அணியில் இருக்கக்கூடிய நீங்கள், உங்களின் கடமையைக் கழகத்துக்கு ஆற்ற வேண்டிய பணியைச் சரியாகச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் சரியான நேரத்தில் உங்களுக்கான அங்கீகாரத்தை நிச்சயம் நம் தலைவர் அவர்கள், உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பார்கள். அதற்குப் பல உதாரணங்கள் இங்கே இருக்கின்றன. சிறப்பாகச் செயல்பட்ட பலர் இன்று பதவி உயர்வுபெற்று தாய் கழகத்துக்கு சென்றிருக்கிறார்கள். இன்று மாநகராட்சியில் மேயர்களாக, துணை மேயர்களாக, ஒன்றியப் பொறுப்பாளர்களாக, மாவட்டப் பொறுப்பாளர்களாக, மாவட்டச் செயலாளர்களாக, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இன்னும் பல்வேறு பொறுப்புகளில் இங்கே அணிகளில் சிறப்பாகச் செயல்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்று அங்கே சென்றிருக்கிறார்கள்.

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சரைக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி. கழகத்தின் பொதுச் செயலாளரைக் கொடுத்தது கழகத்தின் மாணவர் அணி. இப்படி, அணிகளுக்கு என்று ஒரு சிறப்பு இருக்கிறது. சார்பு அணி என்று சொல்வதனால், நாம் ஏதோ தாய்க்கழகத்தின் மேல் சார்ந்து இருக்கிறோம் என்று அர்த்தம் கிடையாது. அதை நாம் மாற்றிக்காட்ட வேண்டும், தாய்க்கழகம் தான் நம்மை சார்ந்து இருக்கிறது, நம் உழைப்பின் மேல், நம் அணியின் மேல் சார்ந்து இருக்கிறது என்பதை, நம் உழைப்பின் மூலம், நம் அணியின் செயல்பாடு மூலம், நாம் அதை மாற்றிக்காட்ட வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

### திராவிட மாடல் அரசு

கடந்த ஐந்து ஆண்டுகளில், நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறார்கள். அதில் சிலவற்றை மட்டும் இங்கே உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நம் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம், முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவர் இட்ட முதல் நாள் முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். இன்று அந்தத் திட்டம் எவ்வளவு பெரிய வெற்றி என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கிட்டத்தட்ட 960 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். இன்று தமிழ்நாட்டைப் பார்த்து மற்ற மாநிலங்களில், இந்தத் திட்டத்தை அமல்படுத்தி இருக்கிறார்கள், அதுதான் இந்தத் திட்டத்தின் வெற்றி.

அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்றால், மாணவி என்றால் புதுமைப்பெண் திட்டம், மாணவர்கள் என்றால் தமிழ்ப்புதல்வன் திட்டம்; அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை நம் அரசே வழங்குகிறது. கிட்டத்தட்ட 12 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் கீழே பயன்பெற்றிருக்கிறார்கள். உயர்கல்வி படிக்கப்போகும் மாணவர்களுக்கு, இப்படி ஒரு திட்டம்.

இன்னொன்று நம் தலைவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொல்லாத திட்டத்தையும் செயல்படுத்திக் கொடுத்திருக்கிறார். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் காலையில் பள்ளிக்கு வந்தால் போதும், முதலில் தரமான உணவு, அதன் பிறகு தரமான கல்வி. இன்று ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தில் பயன்பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

இப்போது சமீபத்தில் நம் தலைவர், 10 லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தை அறிமுகப்படுத்தி ஒரே மாதத்தில் 10 லட்சம் மடிக்கணினிகளையும் கொடுத்திருக்கிறோம். அது மிகப் பெரிய ஒரு வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இன்று இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு திட்டம், தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன திட்டம். எதிர்க்கட்சிகள் எல்லாம் நாம் செய்யவே முடியாது என்று நம்மை விமர்சனம் செய்த ஒரு திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். மூன்று வருடங்களாக நம் தலைவர் கொடுத்துக்கொண்டு வருகிறார், ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு இப்போது கொடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

அந்தத் திட்டத்தை நிறுத்த எதிர்க்கட்சிகள் பல தில்லுமுல்லு வேலைகளில் ஈடுபட்டார்கள். நீதிமன்றத்துக்கு சென்றார்கள். சில மாநிலங்களில் நீதிமன்றத்துக்கு சென்று தேர்தல் வரைக்கும் நிறுத்தி வைத்துள்ளார்கள். இதை தமிழ்நாட்டிலும் எப்படியாவது நிறுத்துகிறோம், இந்த மகளிர் உரிமைத்தொகை திட்டம் மகளிர் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பு பெற்றிருக்கிறது, இதை ஒருமுறை நிறுத்தினால், அது தேர்தலில் எதிரொலிக்கும் என்று சதித்திட்டம் தீட்டினார்கள். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார்? நிறுத்த முயற்சி செய்கிறாயா? நான் 1,000 கொடுத்தால்தானே நிறுத்துவாய்? இதோ 5,000 கொடுக்கிறேன், என்ன செய்து நிறுத்துகிறாய் பார் என்று கொடுத்திருக்கிறார் நம் தலைவர். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் - மூன்று மாதத்துக்குச் சேர்த்து கொடுத்துவிட்டார். அத்துடன் கோடைக்கால சிறப்பு நிதியாக 2,000. அதுமட்டுமல்ல இன்னொரு வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார். யார் யாரோ என்னென்ன வாக்குறுதிகளை வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால், அவற்றையெல்லாம் மக்கள் நம்புவார்களா? தி.மு.க வாக்குறுதி கொடுத்தால் நிச்சயம் செய்வோம் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது. செய்து காட்டியிருக்கிறோம். மீண்டும் ஆட்சி அமையப் போவது உறுதி. திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன், மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயை நான் 2,000 ரூபாயாக உயர்த்திக் காட்டுவேன் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

தலைவர் காலை 7 மணிக்கு தமிழ்நாட்டு மகளிர் அனைவருக்கும் மிகப் பெரிய ஓர் ஆச்சரியத்தை அளித்தார். திடீரென்று அவர்கள் கணக்கில் 5,000 வந்துவிட்டது. ஆனால் இன்னொரு ஆச்சரியம் பார்த்தீர்கள் என்றால், 7 மணிக்கு தலைவர் வரவு வைத்தார், 9 மணிக்கெல்லாம் மகளிர் வங்கியில் வங்கியிலிருந்து பணத்தை எடுத்துவிட்டார்கள். ஏன்? ஒன்றிய அரசு இதில் ஏதாவது சூழ்ச்சி செய்து வங்கியில் இருப்பு இல்லை என்று சொல்லி அந்தப் பணத்தைத் திருடிவிடுவார்களோ என்று, அந்த அளவுக்கு தமிழ்நாட்டு மகளிர், ஒன்றிய அரசு மேல் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நம் ஒன்றிய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### 24 லட்சம் பட்டாக்கள்

ஐந்து வருடத்தில் 24 லட்சம் பேருக்குப் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறது நம் அரசு. மிகப் பெரிய ஒரு சாதனை. `இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48', `மக்களைத் தேடி மருத்துவம்', இப்படிப் பல்வேறு திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். இதுமட்டுமல்ல, முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் தொழில் முதலீட்டிற்காக 471 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு இருக்கின்றன. ஆனால், நம் ஆட்சியில் இந்த ஐந்து வருடங்களில் மட்டும் 1,190 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம்.

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் ஈர்த்த முதலீடு 4 லட்சம் கோடி ரூபாய். ஆனால், நம் ஆட்சியில் 13 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். 2016 - 2021 அ.தி.மு.க ஆட்சியில், 4 தொழில்பேட்டைகளை மட்டும் கொண்டு வந்தார்கள். ஆனால், நம் திராவிட மாடல் ஆட்சியில் நம் தலைவர் கிட்டத்தட்ட 33 சிப்காட்களை இன்றைக்குத் தமிழ்நாட்டுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.

வேளாண்துறையை எடுத்துக்கொள்ளுங்கள். 2016-21-இல் அ.தி.மு.க. ஆட்சியில் 57 லட்சம் ஹெக்டேர் அளவுக்குத்தான் சாகுபடி பரப்பு இருந்தது. ஆனால் நம் தி.மு.க. ஆட்சியில் இன்றைக்கு 62 லட்சம் ஹெக்டேராக அதை உயர்த்திக் காட்டுகிறோம். அதாவது 5 லட்சம் ஹெக்டேரை உயர்த்திக் காட்டியிருக்கிறோம். அதேபோல கடந்த ஆட்சி காலத்தில் ஒரு லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டது. நம் ஆட்சி காலத்தில் இன்றைக்கு 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச இணைப்பைக் கொடுத்திருக்கிறோம்.

### அம்பேத்கர் உயர்கல்வித் திட்டம்

வெளிநாடுகளுக்கு சென்று உயர்கல்வி படிப்பதற்கு ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் பெயர் அண்ணல் அம்பேத்கர் உயர் கல்வித் திட்டம் உதவித்தொகை. இதில் அ.தி.மு.க-வின் 10 ஆண்டு ஆட்சியில் மொத்தம் இரண்டே பேர். ஆனால், நம் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, இந்த ஐந்து வருடங்களில் 340 மாணவர்களுக்கு 160 கோடி ரூபாயை அம்பேத்கர் உயர்கல்வித் தொகையாக நம் அரசு கொடுத்திருக்கிறது.

### பெரம்பலூர் அரியலூர் திட்டங்கள்

இந்த பெரம்பலூர் அரியலூர் மாவட்டத்துக்குப் பல்வேறு திட்டங்களை நம் அரசு செயல்படுத்தியிருக்கிறது.

அரியலூர்-ஜெயங்கொண்டம் சாலை இன்றைக்கு நான்கு வழிச்சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

செந்துறை துணை மின்நிலையம் 26 கோடி ரூபாய் அளவில் தரம் உயர்த்துகின்ற பணி.

செந்துறை அரசு மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அவசர சிகிச்சை பிரிவு.

அரியலூர் நகராட்சியில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம்.

வாரணவாசியில் மருதையாற்றின் குறுக்கே 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணை அமைக்கின்ற பணி. மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களின் பெயரில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அரங்கம்.

அரியலூரில் இருக்கக்கூடிய விளையாட்டு மைதானத்தில் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை தரைதளம் (Artificial turf) கொண்ட ஹாக்கி மைதானம்.

ஜெயங்கொண்டத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான புதிய கட்டடங்கள். கங்கை கொண்ட சோழபுரத்தில் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அருங்காட்சியகம்.

பெரம்பலூரிலிருந்து துறையூர் வரைக்கும் 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட சாலை. ரஞ்சன்குடியில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம். 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

இறையூர் சிப்காட்டில் 4000 பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `பீனிக்ஸ்' காலணி தொழிற்சாலை தொடங்கி இருக்கிறோம்.

### 11.19 சதவிகித வளர்ச்சி

இப்படி பல்வேறு திட்டங்கள், அடுக்கடுக்கான திட்டங்களைத் தமிழ்நாட்டுக்கும் கொடுத்திருக்கிறோம். அதனால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. வளர்கின்ற மாநிலங்களில் முதன்முறையாக இரட்டை இலக்க வளர்ச்சியுடன், 11.19 சதவிகித வளர்ச்சியுடன் இன்றைக்கு அந்த இலக்கை நாம் அடைந்திருக்கிறோம். ஆனால் இவற்றையெல்லாம் ஒன்றிய அரசின் ஆதரவுடன் செய்யவில்லை. ஒன்றிய அரசு எதுவுமே தமிழ்நாட்டுக்குக் கொடுப்பது கிடையாது. நம் வளர்ச்சியைத் தாங்க முடியாமல் இன்றைக்குப் பல்வேறு வகையில் இடைஞ்சல்கள் கொடுக்கிறது ஒன்றிய அரசு. நம் கல்வி உரிமையைப் பறிக்க முயற்சி செய்கிறார்கள். மொழி உரிமை, நிதி உரிமை எல்லாவற்றையும் பறிக்க முயற்சி செய்கிறார்கள். மாநில உரிமைகள் ஒவ்வொன்றையும் தடுக்கிறார்கள்.

கல்வி உரிமை - சென்றாண்டு புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்தார்கள் சென்ற வருடம். மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், தமிழ்நாடு முதலமைச்சர் என்ன செய்தார்?

நீ புதிய கல்விக் கொள்கையை மீண்டும் கொண்டு வந்தாய் என்றால், மீண்டும் தமிழ்நாட்டு மாணவர்கள் மேல் குறுக்கு வழியில் ஹிந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்கப் பார்க்கிறாய். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டோம் என்றால், மீண்டும் குலக்கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டு மாணவர்கள் மேல் திணிக்கிற மாதிரி இருக்கிறது.

### அடிமைகள் பயப்படுவார்கள்

தமிழ்நாட்டைத் தொடர்ந்து மற்ற மாநிலங்கள் இன்றைக்குப் புதிய கல்விக் கொள்கையை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போதுதான் அவர்களுக்குப் புரிய வந்திருக்கிறது. இப்படி ஒவ்வொரு மாநிலமாக காவி பூசுவதற்கான வேலையை ஒன்றிய பா.ஜ.க அரசு செய்து கொண்டு இருக்கிறது. ஆனால், அவர்களால் என்றைக்கும் நாம் இருக்கிற வரைக்கும் தமிழ்நாட்டை நெருங்கவே முடியாது. தொட்டுப் பார்க்கவே முடியாது. அதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம். தமிழ்நாட்டில் எந்த வழியிலும் எந்த நேரத்திலும் உங்களால் நேர்வழியில் நுழையவே முடியாது என்று அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் இன்றைக்கு அவர்களுடன் பல அடிமைகளையும் அழைத்து வருகிறார்கள். தேர்தல் வந்தால் நாம் இன்றைக்கு அணிகளை எல்லாம் வேலை வாங்குகிறோம். நம் அணி - இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி என்று நாம் எல்லா அணிகளையும் வேலை வாங்குகிறோம். இவையெல்லாம் நம் சார்பு அணிகள். அதுவே பா.ஜ.க-வின் அணிகள் ஈ.டி, சி.பி.ஐ, தேர்தல் ஆணையம் இவையெல்லாம்தான் பா.ஜ.க-வின் சார்பு அணிகள். இன்றைக்கு அவர்களை வைத்து அவர்கள் நம்மை மிரட்டப் பார்க்கிறார்கள். அ.தி.மு.க அடிமைகள் பயப்படுவார்கள். ஏனென்றால் பயத்திற்கென்றே கூடிய கூட்டணிதான் அந்தக் கூட்டணி.

சென்ற வாரம் மதுரையில் ஒரு நிகழ்ச்சி. ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் வந்தார்கள். தேர்தல் வரைக்கும் இனி மேல் வாரம் வாரம் வருவார். சென்ற வாரம் வந்தபோது அங்கே இருந்த பெரியார் படத்தை எடுத்துவிட்டார்கள். கவனித்திருப்பீர்கள். சென்ற வாரம் பெரியார் படத்தைத்தான் எடுத்தார்கள். நேற்று திருச்சியில் எடப்பாடி படத்தையும் எடுத்துவிட்டார்கள். கொஞ்ச காலத்தில் எப்படியும் அ.தி.மு.க-வை பா.ஜ.க விழுங்கி முழுங்கி விடும்.

### ஜாடிக்கேற்ற மூடி

இன்றைக்கு பீகாரில் அதைத்தான் செய்திருக்கிறார்கள். 10 முறை முதலமைச்சராக இருந்தவர் நிதிஷ்குமார் அவர்கள். அவர்களுக்கெல்லாம் எடப்பாடி பழனிசாமி எம்மாத்திரம்? ஊதித் தள்ளிவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால் அதைப்பற்றி எல்லாம் எடப்பாடி பழனிசாமி அவர்கள் கவலைப்பட மாட்டார் என்று நமக்குத் தெரியும். முரட்டு பக்தர்களைப் பார்த்திருப்பீர்கள், முரட்டுத் தொண்டர்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்படிபட்ட முரட்டு அடிமையை எங்கேயும் பார்த்திருக்க முடியாது. ஒரு முரட்டு அடிமை அமித்ஷா அவர்களுக்குக் கிடைத்திருக்கிறார், மோடி அவர்களுக்குக் கிடைத்திருக்கிறார். `ஜாடிக்கேற்ற மூடி' என்று ஒரு பழமொழி இருக்கிறது. அதுமாதிரி மோடிக்கு ஏற்ற ஒரு அடிமை எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

விரைவில் தேர்தல் முடிந்த உடனே பாருங்கள், அ.தி.மு.க-வில் இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், அண்ணா பெயரை எடுத்துவிட்டு அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றிவிடுவார்கள். அவர்கள் கொடியில் இருக்கக்கூடிய அண்ணாவின் புகைப்படத்தை எடுத்துவிட்டு மோடியின் புகைப்படத்தையும் அமித்ஷாவின் புகைப்படத்தையும் நிச்சயம் வைத்துவிடுவார்கள். இப்படிப்பட்ட நிலைமையில்தான் இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது.

பா.ஜ.க-வை எதிர்த்து நிற்க வேண்டும் என்றால் அதற்கு ஒரு தைரியமான முதுகெலும்பு உள்ள ஒரு முதலமைச்சர் ஒரு தலைவர் வேண்டும். அதை நாம் எடப்பாடி பழனிசாமியிடம் எதிர்பார்க்க முடியுமா?

இன்றைக்கு யார் வீட்டில் என்ன பிரச்சினை என்றாலும் தி.மு.க.தான் காரணம் என்கிறார்கள். வேறு எந்தக் குறையும் நம்மைச் சொல்ல முடியவில்லை. நேற்று அன்புமணி சொல்லிவிட்டார், எங்க அப்பாவைப் பிரித்ததுக்கு தி.மு.க தான் காரணம் என்று சொல்கிறார்.

அடுத்த 40 நாட்கள் மிக மிக முக்கியம். நான் அடித்துச் சொல்கிறேன் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டிலும் நிச்சயம் யாராவது ஒரு பயனாளியாவது நம் அரசின் திட்டத்தினால் பயன்பெற்றவர்கள் நிச்சயம் இருப்பார்கள். அவர்களை எல்லாம் சந்தித்து அடுத்த 40 நாட்கள் களப்பணியாற்றுங்கள். வருகிற 15-ஆம் தேதி அல்லது 16-ஆம் தேதி தேர்தல் தேதி அறிவிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். ஏப்ரல் 18 லிருந்து 20 - ஆம் தேதிக்குள் தேர்தல் என்கின்ற மாதிரி சொல்கிறார்கள். இங்கே பார்த்தீர்கள் என்றால், அடுத்து ஒரு 35, 40 நாட்கள்தான் நம் கைகளில் இருக்கின்றன. எனவே, இந்த அடிமைகளையும் உரிமையாளர்களையும் சேர்த்து, நாம் விரட்டியடிக்க வேண்டும்.

### அரசின் சாதனைகள்

நம் அரசின் சாதனைகள் இருக்கின்றன. நம் கழகத்தின் வரலாறு இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் உள்வாங்கி மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு இலக்கு வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு 50 பேரையாவது நேரில் சந்தித்துப் பேசுங்கள்.

உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய மக்களை நேரில் சந்தித்துப் பேசுங்கள். அவர்கள் குறைகளைக் கேளுங்கள். உங்களால் செய்ய முடிந்தால் செய்து கொடுங்கள். இல்லையென்றால் அங்கே இருக்கக்கூடிய நிர்வாகிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றால் நிச்சயமாகச் செய்து கொடுக்க முடியும். மக்களின் மனங்களை வெல்லுங்கள். அவர்களின் நம்பிக்கை மிக மிக முக்கியம். அது நிச்சயம் தி.மு.க காரனால் செய்ய முடியும், நம்மால் செய்ய முடியும்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் செல்வாக்கில், உங்களின் கட்டுப்பாட்டில் ஒரு 100 வாக்குகள், 100 பேரை உங்களின் செல்வாக்கில் நீங்கள் வைத்திருந்தீர்கள் என்றால் உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ தவிர்க்கவோ முடியாது. இன்னும் 40 நாட்கள்தான் நம் கையில் இருக்கின்றன. தேர்தல் என்று வந்துவிட்டால் தி.மு.க காரனுக்கு ஒரு பெருமை இருக்கிறது, என்னவென்றால் தேர்தல் என்று வந்துவிட்டால் சிங்கிள் டீயை மட்டும் குடித்துவிட்டு இரவு பகலாக வேலை செய்வான் என்ற பெருமை நமக்கு இருக்கிறது. அதை நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம் இந்தத் தேர்தல் நேரம், அதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். உங்களின் பணிகளைப் பிரித்துக்கொள்ளுங்கள். இளைஞர் அணிக்கு என்று சில பணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி தேர்தல் வேலைகளைப் பிரித்துச் செய்துகொண்டு இருக்கிறோம். வீடு வீடாகப் சென்று இளைஞர்களைச் சந்திக்கிறோம். இளைஞர்களை ஈர்க்கின்ற வகையில், எங்களின் பணிகளை நாங்கள் அமைத்துக் கொள்கிறோம்.

மாணவர் அணியினர் உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்களை சந்தியுங்கள். இந்த ஐந்து வருடத்தில் மாணவர்களுக்கு என்னென்ன திட்டங்கள் செய்திருக்கிறோம் என்பதை கொண்டு சேருங்கள்.

தகவல் தொழில்நுட்ப அணி ஏற்கனவே சமூக ஊடகங்களில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறீர்கள், இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டும். கழக அரசின் சாதனைகளை, தலைவரின் அறிக்கைகளை, பேச்சுகளை எல்லாம் சின்னச் சின்ன அட்டைகளாக (Cards) பிரித்துப் போடுங்கள்.

### நமக்கென்று ஒரு வரலாறு

சிறிய சிறிய காணொலிகளைப் பதிவு செய்து உங்கள் யூடியூப் சேனல்களில் ஏற்றுங்கள். நான் உங்களைப் பொய் செய்திகளையோ அல்லது போலியான செய்திகளையோ பரப்பச் சொல்லவில்லை. நமக்கென்று ஒரு வரலாறு இருக்கிறது, நமக்கென்று செய்த திட்டங்கள் இருக்கிறது, தரவுத்தளம் இருக்கிறது, எண்கள் இருக்கிறது. அதை மக்களிடம் கொண்டு போய் சேர்த்திடுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் ஊடகமாகச் செயல்பட வேண்டும்.

சட்டப்பிரிவில் இருப்பீர்கள், தேர்தல் என்று வந்துவிட்டால், கழகத்தின் மிகப்பெரிய பலம் சட்டத்துறைதான். வேட்புமனுத் தாக்கலில் இருந்து வாக்கு எண்ணிக்கை முடிந்து சான்றிதழ் வாங்கும் வரை உங்களின் பணி மிக மிக முக்கியமானது. அதேபோல சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இருப்பீர்கள், இன்றைக்கு அடிமை அ.தி.மு.க-வும் பாசிச பா.ஜ.க-வும் சிறுபான்மையின மக்களுக்கு என்னென்ன துரோகங்களைச் செய்து வருகிறார்கள் என்பதைக் கொண்டு சேருங்கள். தமிழ்நாட்டுக்கு, குறிப்பாகச் சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருப்பது திராவிட முன்னேற்றக் கழகமும் நம் தலைவரும்தான் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம், அதைப் பற்றிப் பேசுங்கள்.

### கருத்துகளைப் பதிவு செய்யுங்கள்

மருத்துவ அணி, பொறியாளர் அணி உள்ளிட்ட 25 சார்பு அணிகளும் உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய நண்பர்கள், மருத்துவர்கள், பொறியாளர்களுடன் வாட்ஸ்அப் குழுக்களை உருவாக்கி, உங்கள் கருத்துகளை அதில் பதிவு செய்யுங்கள். யூடியூப், வாட்ஸ்-அப், ஃபேஸ் புக் ஆகிய சமூக வலைதளங்களில், கழகத்தின் வரலாறு மற்றும் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் சாதனைகளைத் தவறாமல் பதிவு செய்யுங்கள். இவைதான் மக்களை எளிதாக சென்றடையும் தேர்தல் வியூகங்கள். வருகின்ற 40 நாட்களும் நாம் அயராது உழைத்தால், நம்மை எவராலும் வெல்ல முடியாது.

விளையாட்டு மேம்பாட்டு அணியினர் உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களைத் தொடர்பு கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளில், குறிப்பாக இந்த மூன்று ஆண்டுகளில் நாம் எவ்வளவு பெரிய சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லுங்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் கலைஞர் விளையாட்டுத் தொகுப்பு வழங்கியிருக்கிறோம், இது எந்த அரசும் செய்யாத சாதனை. இதுவரை 12,500 ஊராட்சிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். அ.தி.மு.க ஆட்சியில் விளையாட்டுத்துறை இட ஒதுக்கீட்டில் இரண்டே பேருக்குத்தான் அரசு வேலை வழங்கப்பட்டது, ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் நம் திராவிட மாடல் அரசு 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வழங்கியுள்ளது.

சுமார் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், பெரம்பலூர், குன்னம், ஜெயங்கொண்டம் பகுதிகளில் பல்வேறு விளையாட்டு உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம், இதை விளையாட்டு வீரர்களிடம் சொல்லுங்கள்.

### தமிழ்நாடா? மகளிர் நாடா?

மகளிர் அணியினருக்கு ஒரு பெரிய சாதகம் இருக்கிறது. மற்ற அணிகள் வீட்டு வாசல் வரைதான் போக முடியும், ஆனால் நீங்கள் சமையலறை வரை சென்று உரிமையோடு பிரச்சாரம் செய்ய முடியும். இன்றைக்குத் திராவிட மாடல் அரசு என்பதைத் தாண்டி இது மகளிருக்கான அரசு என்றுதான் அனைவரும் சொல்கிறார்கள். தமிழ்நாடா? மகளிர் நாடா? என்று கேட்கும் அளவிற்குத் தலைவர் திட்டங்களைக் கொடுத்துள்ளார். எனவே, நீங்கள் உரிமையோடு உதயசூரியனுக்கு வாக்களிக்கச் சொல்லிப் பிரச்சாரம் செய்யுங்கள். அடுத்த 40 நாட்கள் தொய்வின்றிப் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும். பொதுமக்களைச் சந்திக்கும்போது மிகுந்த கவனத்துடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

எல்லோரிடமும் அலைபேசி இருக்கிறது, செய்தி ஊடகங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. தி.மு.க. மீதோ தலைவர் மீதோ எந்தப் பழியும் சொல்ல முடியாத சூழலில், யாராவது ஒரு நிர்வாகி தவறாகப் பேசிவிட்டால், அதைப் பெரிதுபடுத்துவார்கள். எனவே கவனமாகப் பேசுங்கள். புதிய நிர்வாகிகள் ஏதேனும் தவறு செய்தால் மூத்த நிர்வாகிகள் அவர்களை அரவணைத்து வழிகாட்டுங்கள்.

நான் இன்று ஒரு துணை முதலமைச்சராகவோ, அமைச்சராகவோ மட்டும் வரவில்லை, உங்களைப் போல ஓர் அணியின் செயலாளராக அந்த உரிமையுடன் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். நமக்குள்ளே ஓர் ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். எந்த அணி சிறப்பாகப் பணியாற்றியது என்பதில் போட்டி இருக்கட்டும்.

### வெல்வோம் 200, படைப்போம் வரலாறு

ஒரு போர் என்று வந்துவிட்டால், திட்டமிட்டு அணி அணியாகச் செயல்பட்டால்தான் வெற்றி பெற முடியும். வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் இடையிலான போர். இதை மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டு மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். நம் தலைவர் கொடுத்த 'வெல்வோம் 200, படைப்போம் வரலாறு' என்ற இலக்கையும் தாண்டி 234 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும்.

தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி என்று பிரிந்திருந்தாலும், நாமெல்லாம் கலைஞர் அணி, தலைவர் அணி என்பதை மனதில் வைத்துக்கொண்டு நாம் தேர்தல் பணிகளை ஆற்ற வேண்டும்.

அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள நான்கு தொகுதிகளிலும் 4-4 என்ற கணக்கில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். இந்த வெற்றி சாதாரண வெற்றியாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு தொகுதியிலும் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நாம் வெற்றி பெற்று காட்ட வேண்டும்.

தேர்தல் எண்ணிக்கை அன்று முதல் சுற்றிலிருந்து கடைசிச் சுற்று வரை நாம்தான் முன்னிலையில் இருக்க வேண்டும். அதற்கு சார்பு அணிகளான உங்களின் உழைப்பு மிக மிக முக்கியம்.

உதயசூரியன் என்பது வெறும் சின்னம் அல்ல, அது நம் உயிருடன் கலந்த சின்னம் உதயசூரியன். அண்ணா தந்த சின்னம் உதயசூரியன், நம் கலைஞர் காத்த சின்னம் உதயசூரியன், நம் தலைவரால் வெற்றிகளை மட்டுமே பெற்றுக்கொண்டிருக்கின்ற சின்னம் உதயசூரியன். உதயசூரியன் வெற்றிக்கு நீங்கள் அனைவரும் உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் கழகம் ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்கவும், தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக அமரவும் சார்பு அணிகளான நம் உழைப்பு மிக மிக முக்கியமானது. தலைவர் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா, அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஜெகதீசன், கழகத்தின் சட்ட திட்டத் திருத்தக் குழுவின் இணைச் செயலாளர் சுபா சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகர், கா. சொ.க.கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் துரைசாமி, ராஜ்குமார், இளைஞர் அணியின் மாநிலத் துணைச் செயலாளர் ஆனந்தகுமார், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் குன்னம் ராஜேந்திரன், பரமேஸ்வரன், சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் தங்க சித்தார்த்தன், ஏ.கே.அருண், அன்பரசன், மாவட்டக் கழக நிர்வாகிகள் நடராஜன், பாஸ்கர், சம்பத், நூர்நிலா இஸ்மாயில், ரவிச்சந்திரன், கணேசன், சந்திரசேகர், லதா பாலு, ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பால சுப்பிரமணியம், அட்சயகோபால், ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் தெய்வ இளையராஜன், ஹரி பாஸ்கர் என்கின்ற ஆதவன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சிவசங்கர், சுப்பிரமணி, அப்துல் கரீம், பிரபாகரன், அருண், வீர சிவகுருநாதன், எஸ்.ஆர். முருகேசன், வசந்த பகவான், தமிழ்மாறன், தர்மராஜ், குணசீலன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.